1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி
O.S.No. 356/2020

21.10.2024 வ.சா.1 திரு. ஜான்

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –

1. நான் 6 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு 40 வயது ஆகிறது. நான் 1983 ல் பிறந்தேன். எனக்கு தாவா சொத்து மற்றும் ஆவணங்களை பற்றி தெரியும். ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை மற்றோர் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் மூலம் தான் ரத்து செய்யமுடியும் என்றால் சரிதான். தாவா சொத்து ஞானமுத்து நாடாருக்குத்தான் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் ஞானமுத்து நாடாரின் வாரிசுகள் யார் யார் என ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாரிசு தொடர்பாக என்ன வழக்கு நடக்கிறது என்றால் வாரிசு சான்றிதழ் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோம். வழக்கின் எண். 366/2020 என நினைக்கிறேன். அந்த வழக்கில் யார் யார் தரப்பினர்கள் என்றால் அந்த வழக்கை என் சித்தப்பா தங்கராஜ் தாக்கல் செய்தார், அதில் நானும் தரப்பினர் அதில் எதிர் பார்டி யாரும் இல்லை. என் தந்தை காலமான பிறகு அந்த வழக்கில் எங்களை சேர்த்துள்ளார்கள். ஞானமுத்து நாடாருக்கு என் தந்தையும் என் சித்தப்பா திவர மற்றும் வேறு வாரிசுகள் உள்ளார்கள் என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

2. 1976 ம் ஆண்டு பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என் தந்தை சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். என் தந்தை 2020 ம் ஆண்டு இறந்துவிட்டார். என் தந்தை இறக்கும் வரை ஒத்தி ஆவணத்தை ரத்து செய்ய சட்டவடிக்கை எடுத்தாரா என்றால் எடுக்கவில்லை. வா.சா.ஆ.1 ல் 3 ம் பக்கத்நதில் பின் பக்கம் ஊதா மையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மற்ற அனைத்து எழுத்துக்களும் கருப்பு மையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முழுவதையும் படித்துப்பார்த்து தெரிந்துக்கொண்டேன். மேற்படி ஆவணத்தில் கண்ட தொகைக்கு சொத்தின் அனுபவம் கேதுரு நாடாரிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை 3 ஆண்டுகளுக்குள் மீதி தொகையை கொடுத்து செல்லடிக்கவேண்டும் என்றால் சரிதான்.மேற்படி 1979 ம் ஆண்டுக்களுகுள்ளோ 1980 க்குள்ளோ ஞானமுத்து நாடார் தொகையை கொடுத்து செல்லடிக்கவில்லை என்றால் சரிதான். என் தந்தை பாக்கியநாதன் தான் செல்லடித்தார். என் தந்தை பாக்கி தொகை கொடுத்து பதிவு செய்யப்பட்ட ஆவண மூலம் செல்லடிக்கவில்லை என்றால் சரிதான்.

3. 1983 ம் ஆண்டிலிருந்து தாவா சொத்திற்கு என் தந்தை பெயரில் பட்டா உள்ளதா என்றால் கூட்டுப்பட்டா உள்ளது. மேற்படி கூட்டு பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1 முதல் 6 பிரதிவாதிகள் தான் கேதுரு நாடாரின் வாரிசுகள் என்றால் சரிதான். 1976 ஒத்தி ஆவணத்தின்

அடிப்படையில் கேதுரு நாடார் அனுபவம் செய்து வந்தார் என்றாலும் அதன் பிறகு கேதுரு நாடாரின் வாரிசுகள் தான் அனுபவம் செய்தார்கள் என்றால் சரியல்ல. ஞானமுத்து நாடாருக்கும் எனது தந்தை பாக்கிநாதனை தவிர வேறு வாரிசுகள் உள்ளார்கள் என்றாலும் அவர்களை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கேதுரு நாடார் 17.12.2007 அன்று இறந்துவிட்டார்அது முதல் 1 முதல்6 பிரதிவாதிகளின் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. கேதுரு நாடார் இறந்தபிறகு என் தந்தை 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.1 காலவதி ஆனால் பொய்யான வழக்கு மூலம் கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு காலவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் 3 பக்கத்தில் கேதுரு நாடார் கையெழுத்து என்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் 3 பக்கத்தில் வேறு சாட்சிகள் யாரும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே பணம் செலுத்திலிருந்தால் பதிவு செய்யப்பட்ட ஆவணம் எழுதியிருப்போம் என்றாலும் என் தந்தையோ ஞானமுத்து நாடாரோ பணம் கொடுக்காததால் தான் ஆவணம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல, பணம் கொடுத்ததால் தால் அசல் ஆவணம் எங்களிடம் கொடுத்தார்கள். அசல் ஆவணம் எப்படியோ எங்களிடம் கைவசம் உள்ளதை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு கேதுரு நாடாரின் கையெழுத்தை மோசடி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. எனக்கும் 1ம் வாதிக்கும் இந்த வழக்கை தாக்கல் செய்ய எந்த முகந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து நாளது தேதி வரை பிரதிவாதிகள் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் அவசிய தரப்பினரை கட்சியாக சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படத்தக்கது என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்ய எங்களுக்கு வழக்கு மூலம் இல்லை என்றாலும் இந்த வழக்கை தள்ளுபடி செய்யப்படத்தக்கது என்றால் சரியல்ல.